## மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.

## அசல் வழக்கு எண். 57/2021

பெயர் : ராஜமாணிக்கம் P.W.2. Cross

த/பெ. : நாகரெத்தினம்

தேதி : 25.09.2025

சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை: –**

1. யார் என்னை சாட்சியம் அளிக்க வரசொன்னார்கள் என்றால் ரங்கராஜ் என்பவர் அழைத்தார். என்ன சொல்ல சொல்லி அழைத்து வந்தார் என்றால் உண்மையை சொல்ல சொல்லி அழைத்து வந்தார். நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் முன்பு சலவை தொழில் செய்து வந்தேன். தற்போது வயோதிகத்தின் காரணமாக ஓய்வில் உள்ளேன். எனது சொந்த ஊர் தில்லையாடி ஆகும். அங்கு கண்ணடியர் தெருவில் உள்ளேன். ரங்கராஜன் திருக்களாச்சேரியில் வசித்து வருகிறார்.

2. ஆற்றங்கரை ஓரம் ரங்கராஜுக்கு பாத்தியப்பட்ட சொத்துகள் உள்ளது என்றால் சரிதான். அந்த சொத்து 1 ஏக்கருக்கு மேல் உள்ளது. அது வடக்கு பார்த்து உள்ள சொத்து என்றால் சரிதான்.மேற்படி சொத்தின் வடக்கே ரோடும், தெற்கிலும் மேற்கிலும் வயல்வெளி, கிழக்கில் கடைத்தெரு உள்ளது. மேற்படி சொத்தில் ரங்கராஜன் இல்லை என்றால் சரிதான். எனக்கு 80 வயது ஆகிறது. நான் எனது மகன் கொடுப்பதை வாங்கி ஜீவனம் செய்து வருகிறேன். மேற்படி சொத்து ஆதிகாலத்தில் யாருக்கு பாத்தியப்பட்டதாக இருந்து என்றால் ரங்கராஜ் அப்பா வகையறாவிற்க பாத்தியப்பட்டது என சொல்வார்கள். மேற்படி சொத்தின் முழுமையான விரபங்கள் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

3. ஆக்கூர் அகோரம் அய்யர் என்பவரை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அகோரம் அய்யருக்கு பிறகு அந்த சொத்து யாருக்கு சென்றது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்தில் சமீப காலத்தில் நான் உள்ளே சென்றுள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்து ஒரு தனியாருக்கு சொந்தமானது என்றால் சரிதான். தாவா சொத்தை பொறுத்து ரங்கராஜ் என்பவருக்கு பிறகு யார் யாருக்கு கொடுக்கப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. தற்சமயம் தாவா சொத்தின் நவீன அரிசி ஆலை இயங்கி கொண்டிருக்கிறது என்றால்

சரிதான். அதற்கு தற்போதைய உரிமையாளர் யார் என்றால் செட்டியார் ஆவார். அவரை எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது.

4. இந்த தாவா சொத்தை பொறுத்து எனக்கு எதுவும் தெரியாது என்பதாலும், ரங்கராஜ் என்பவர் எனக்கு தெரிந்தவர் என்பதாலும், எனது இன்றைய ஜீவனத்திற்கு அவர் உதவி செய்ததாலும், அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.